விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
ADMISSIONS OPEN NOW
MAIN INTAKE 2026
BSc IT, BBA
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
077 147 1471
021 7534 807
(C-5023)

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 063 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 08 வெள்ளிக்கிழமை (20.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.பல்கலையின் பட்டமளிப்பு விழா



03ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவ பீட மாணவி நற்குணம் அபிராமி

### 8 தங்கப் பதக்கங்கள் பெற்றுச் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40ஆவது பட்ட மளிப்பு விழாவில் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த செல்வி



15ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பிரதித் தூதுவர் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந் தியப் பிரதித் தூதுவர் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்

16ஆம் பக்கம் பார்க்க

## 12 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைதாகி மறியல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைதான 12 இந்திய கடற்றொழி லாளர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று உத்தர விட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## அங்கீகரிக்கப்படாத ஆயிரம் தொல்பொருள் இடங்களைப் பாதுகாக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை அங்கீகரிக்கப் படாத தொல்பொருள் பெறுமதிமிக்க சுமார் 1,000 இடங்களைப் பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை அரசாங் கம் ஆரம்பித்துள்ளதாக

16ஆம் பக்கம் பார்க்க

## - யாழ்.சர்வதேச விமான நிலையத்தை -

# அபிவிருத்தி செய்ய உடன் நடவடிக்கை

### யாழில் அமைச்சர் அநுர கருணாதிலக்க

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட வேண்டும்

### வலி.வடக்கு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வலி காமம் வடக்கு பிரதேச சபை மற்றும் புதுக்குடியிருப்பு பிர தேச சபை ஆகியவற்றில் தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப் பட வேண்டும் எனவும் தற் போது அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட் டம் அமுல்படுத்தக் கூடாது எனவும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.வலிகாமம் வடக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## “பழசும் வேண்டாம் புதுசும் வேண்டாம்”

### யாழ்.பல்கலை முன்றலில் கையெழுத்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

“பழசும் வேண்டாம் புதுசும் வேண்டாம்” எனும் தொனிப்பொரு ளில் பயங்கரவாதத்

16ஆம் பக்கம் பார்க்க



## AI தொழில்நுட்பம் பொருளாதார ரீதியாக பல நாடுகளை ஓரங்கட்டும்

### புதுடில்லியில் ஜனாதிபதி அநுர

(புதுடில்லி)

AI தொழில்நுட்பம் பொருளாதார ரீதியாக பல நாடுகளை ஓரங்கட்டும் அபாயம் உருவாகியுள்ளதாக ஜனாதி பதி அநுர குமார

15ஆம் பக்கம் பார்க்க



## மானிப்பாயில் இளைஞனின் சடலம் மீட்பு

(கரணவாய்)

மானிப்பாய் மேற்கு, சோதி வேம்படியில் உள்ள மாவடி மைதானத்திற்கு அருகாமையில் உள்ள வளவு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் 28 வயது

15ஆம் பக்கம் பார்க்க

## கற்கோவளத்தில் குடும்பப் பெண் மீது வீடு புகுந்து வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கற்கோவ ளத்தில் குடும்பப் பெண் மீது வீடு புகுந்து வாள்வெட் டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள வயது முதிர்ந்த தம்பதிகள் வாழும்

16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார் இறங்குதுறையை அபிவிருத்தி செய்யத்திட்டம்

## அமைச்சர் அநுர கருணாதிலக்க நேரடி விஜயம்



(மன்னார்)

தலைமன்னார் இறங்குதுறையை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தலைமன்னார் இறங்குதுறையின் (Jetty) தற்போதைய நிலைமைகளைக் கண்டறிவதற்கும் அங்கு முன்மொழியப்பட்டுள்ள புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வதற்கும் விசேட கண்காணிப்பு விஜயமொன்றை நேற்று மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது, அமைச்சருடன் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு, அமைச்சின் செயலாளர் டபிள்யூ.டபிள்யூ.எஸ். மங்கள, அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

தலைமன்னார் இறங்குதுறையானது இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையே நீண்டகாலமாக வரலாற்றுச் சிறப்புமிக்க கடல்வழிப் போக்குவரத்துத் தொடர்பைப் பேணி வந்த ஒரு முக்கிய தளமாகும்.

தற்போதுள்ள இறங்குதுறையின் கான்கிரீட் தூண்கள் மற்றும் உருக்குக் கட்டமைப்புகள் மிகவும் சிதைவடைந்து காணப்படுவதுடன் அதன் மரப்பலகை நடைபாதைகளும் பாவனைக்கு உதவாத நிலையில் சேதமடைந்துள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வடக்கு இறங்குதுறையை பல கட்டங்களாக நவீனமயப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் முதற்கட்டமாக 310 மீற்றர் நீளமும் 7 மீற்றர் அகலமும் கொண்டதாக இந்த இறங்குதுறை நிர்மாணிக்கப்படவுள்ளதோடு பிரதான வீதியிலிருந்து கப்பல்கள் நங்கூரமிடும் பகுதி வரை பயணிகள் மற்றும் வாகனங்கள் தடையின்றிச் செல்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

அத்துடன், இரவு நேரப் போக்குவரத்துக்கான நவீன மின்விளக்கு வசதிகள், பயணிகள் முனையக் கட்டிடங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-7)

# ஊடகவியலாளர் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்

## மாணவன் டிலக்ஸனுக்கு



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் யாழ். பல்கலை மாணவன் டிலக்ஸனுக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில், ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் "அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்", இம்முறை ஊடகக் கற்கைகள் துறை மாணவன் வோல்டர் இருதயராஜன் டிலக்ஸனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40ஆவது பட்டமளிப்பு விழா 19.02.2026 முதல் 22.02.2026 வரை நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது.

இதன் இரண்டாம் நாளான 20.02.2026 இன்று நடைபெறும் அமர்வின்போதே, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் டிலக்ஸனுக்கு இந்த மதிப்பார்ந்த தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளது. (ம-7)

# பிரான்ஸ் ஜனாதிபதியுடன் அநுர கலந்துரையாடல்


(புதுடில்லி)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் ஆகியோருக்கு இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தை நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

புது டில்லியில் நடைபெற்றுவரும் AI Impact 2026 உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ள நிலையில் அரச தலைவர்களுக்கு இடையிலான இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ம-7)




# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வடிவேலு சாந்தவேல்

தோற்றம்
14.03.1982

மறைவு
20.02.2025

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
நேற்றுப் போல் இருக்குதப்பா
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்...

உம் நினைவுகளுடன்....
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், அக்கா, அத்தான்,
தம்பி, மச்சாள், தங்கை, மச்சான்,
மருமக்கள், பெறாமக்கள்.

இல 16,
கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(6874)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ். பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம் நேற்றுக் காலை யாழ். பல்கலைக் கழகத்தின் ஐந்தாவது வேந்தர் தகைசார் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் ஆரம்பமாகியது.


மரபார்ந்த பண்பாட்டு அணிவகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், அலுவலர்கள், நிதியாளர், நூலகர் மற்றும் பதிவாளர் அணிவகுத்து வர, கொடி, குடை, ஆலவட்டங்கள் சகிதம் விழா அரங்குக்கு வருகை தந்த துணைவேந்தரும், வேந்தரும் பட்டங்களையும், பரிசில்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்களையும் வழங்கினர்.

நேற்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்கள் பன்னிரண்டு அமர்வுகளாகப் பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் மூவாயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (நி-8)





# மாகாண சபைத் தேர்தல் தாமதம் அதிருப்தியை வெளியிட்டது கனடா



(கொழும்பு)

**இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படுவதில் நிலவும் தாமதம் குறித்து கனடா தனது அதிருப்தியை வெளிப் படுத்தியுள்ளது.**

கனேடிய உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவின் இந்த நிலைப்பாட்டுக்கு பதிலளித்துள்ள அமைச்சர், இந்தத் தாமதம் அரசாங்கத்தின் திட்டமிட்ட செயல் அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

மாறாக, சட்ட ரீதியான சிக்கல்கள், தொழில்நுட்பத் தடைகள் மற்றும் எல்லை நிர்ணயப் பிரச்சினைகளே இதற்குக் காரணம் என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாகாண சபை முறையை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அங்கீகரித்துள்ளதாக அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், கல்வி மற்றும் மொழி கனடாவின் "Pathways to Peace" திட்டத்தின் கீழ் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கவும், இரு மொழிகளையும் இரண் டாம் மொழியாகக் கற்றுக் கொள்வதை ஊக்குவிக்கவும் இதன்போது உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை மாணவர்கள் கனடாவில் உயர்கல்வியைத் தொடர மேலதிக வாய்ப்புகளை வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

புத்தளம், மன்னார் மற்றும் வடகிழக்கு மாகாணங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் கனடா முன்வந்துள்ளது. (நி)

# அதிகாரிகளின் அலட்சியத்தால் அதிகரிக்கும் விசர்நாய்க்கடி

## கால்நடை வைத்தியர்கள் சங்கம் பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் விசர்நாய்க்கடி நோய் தடுப்பு மற்றும் நாய் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அலட்சியமாகச் செயற்படுவதாக கால்நடை வைத்தியர்கள் சங்கத்தினர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் ஆலோசகர் மருத்துவர் சமித் நாணயக்கார இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நாய் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்ட போதிலும், அதில் 27 மில்லியன் ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரிகளின் இந்த பொறுப்பற்ற செயலால் நாட்டில் தெருநாய்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக அவர் சாடினார்.

சமூகத்திலிருந்து விசர்நாய்க்கடியை முழுமையாக ஒழிக்க வேண்டுமானால், குறைந்தது 70 சதவீத நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

மேலும், முறையான கருத்தடைத் திட்டங்கள் மற்றும் பொறுப்பான செல்லப்பிராணி வளர்ப்பு முறை இல்லாவிட்டால், விசர்நாய்க்கடியைக் கட்டுப்படுத்துவது சாத்தியமற்றது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த "ஒரே ஆரோக்கியம்" எனும் கருப்பொருளின் கீழ் ஒரு தேசிய மூலோபாயத்தைத் தயாரிக்குமாறு அவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். (நி)

# புதிய மின்சக்தி கொள்கையால் மின்கட்டணம் உயரும் - சம்பிக்க

(கொழும்பு)

புதிய மின்சக்தி கொள்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் குறைந்தபட்ச மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் புதிய கொள்கையினால் மின்சாரக் கட்டணம் அதிகரித்து மக்கள் சுமைக்குள்ளாவார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்கு தரம் குறைந்த நிலக்கரியை இறக்குமதி செய்தமையால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தையும் மக்களே சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

நிலக்கரி மோசடிக்குப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக அரசாங்கம் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார். (நி)

# போதைப்பொருள் மாபியாக்களை வேரோடு அறுப்போம்

## நீதி அமைச்சர் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நீண்ட காலமாக வேரூன்றியுள்ள பாதாள உலகக் குழுக்களையும், போதைப்பொருள் மாபியாக்களையும் வேரோடு பிடுங்கி எறிவதற்கு எமது அரசு தீர்மானித்துள்ளது என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார அதிரடியாகத் தெரிவித்தார்.

நாட்டின் சட்ட ஒழுங்கைச் சீர்குலைக்கும் இத்தகைய குற்றக் கும்பல்களுடன் தொடர்புடைய எவரும், எத்தகைய அதிகாரப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர், "நாட்டில் பாதாள உலகக் குழுக்கள் இந்தளவுக்குக் கட்டற்று வளர்ந்தமைக்கு கடந்த கால ஆட்சியாளர்களே பொறுப்புக் கூற வேண்டும்" என்றும் சாடினார்.

"இன்று நாடு எதிர்கொள்ளும் இந்த அச்சுறுத்தலான சூழலுக்கு ராஜபக்ஷக்களின் ஆட்சியே அடித்தளம் இட்டது. அவர்களது அரசியல் ஆதரவே இக்குழுக்கள் இன்று விஸ்வ ரூபம் எடுக்கக் காரணம்" என்றும் அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

இலங்கையில் பாரிய குற்றங்களைப் புரிந்துவிட்டு, வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழும் பாதாள உலகத் தலைவர்களைக் குறிவைத்து அரசு புதிய வியூகங்களை வகுத்துள்ளது. வெளிநாடுகளில் தலைமறைவாக இருக்கும் சகல பாதாள உலக உறுப்பினர்களையும் சர்வதேச பிடியாணைகள் ஊடாகக் கைது செய்து, அவர்களை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து சிறையில் அடைப்போம்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க சர்வதேச பொலிஸார் இலங்கை அரசுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், தொழில்நுட்ப ரீதியாகவும் புலனாய்வு ரீதியாகவும் இக் குற்றவாளிகளைக் கண்காணிக்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# 2028 உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடித் தகுதி பெற்ற இலங்கை

## சூப்பர் 8 சுற்றின் மூலம் உறுதி

**2026 ஐ.சி.சி ஆண்கள் ரி- 20 உலகக் கிண்ணத் தொடரின் "சூப்பர் 8" சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ள அணிகள், 2028 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அடுத்த உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.**

நேற்று முன்தினம் நடைபெற்ற நமீபியாவுக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி பெற்ற வெற்றியுடன், "சூப்பர் 8" சுற்றில் விளையாடவுள்ள 8 அணிகளும் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் 2028 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு மொத்தம் 12 அணிகள் நேரடியாகத் தகுதி பெறுகின்றன.

தற்போதைய தொடரில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ள இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து மற்றும் சிம்பாப்வே ஆகிய 8 அணிகளும் 2028 தொடருக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.



மார்ச் 9 ஆம் திகதி நிலவரப்படியான ஐ.சி.சி தரவரிசையின் அடிப்படையில் அடுத்த சிறந்த 3 அணிகள் நேரடியாகத் தகுதி பெறும். இதன்படி பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் இந்த இடங்களைப் பிடிக்கவுள்ளன.

2028 உலகக் கிண்ணத் தொடரில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கவுள்ளன. மீதமுள்ள 8 இடங்களுக்கான அணிகள் பிராந்திய ரீதியிலான தகுதிச் சுற்றுப் போட்டிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

இலங்கையைப் பொறுத்தவரை, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான வெற்றியைத் தொடர்ந்து சூப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்ததன் மூலம், அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவதையும் உறுதி செய்துள்ளது.

பாகிஸ்தான் அணி இன்று நமீபியாவை 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தனது இடத்தை உறுதி செய்தது. (ரி)

# மதீஷ பத்திரணவுக்கு பதில் டில்ஷான் மதுஷன்க

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கண்டி பல்லேகலையில் நடைபெற்ற தீர்மானம் மிக்க ரி-20 உலகக் கிண்ண "பி" குழு போட்டியின்போது 4 பந்துகளை வீசிய நிலையில் உபாதைக்குள்ளான மதீஷ பத்திரண தொடரும் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு பதிலாக டில்ஷான் மதுஷன்கவை இலங்கை குழாத்தில் இணைத்துக்கொள்ள ஐ.சி.சி தொழில்நுட்பக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பெப்ரவரி 16ஆம் திகதி நடைபெற்ற இலங்கை அணியின் உலகக் கிண்ணப் போட்டியின் போது இடது காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்டதால் பத்திரண உடனடியாக களம் விட்டு வெளியேறினார். அவரது ஓவரை தசுன் ஷானக்க பூர்த்தி செய்தார்.

அவருக்கு நடத்தப்பட்ட ஸ்கான் பரிசோதனையில் அவரால் தொடர்ந்து உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட முடியாது என கண்டறியப்பட்டது.


இதனை அடுத்து டில்ஷான் மதுஷன்கவை அணியில் இணைத்துக்கொள்ள ஐ.சி.சி தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதலுக்கு அவரது பெயரை ஸ்ரீலங்கா கிரிக்கெட் சமர்ப்பித்திருந்தது.

இதற்கான ஒப்புதலை ஐ.சி.சி தொழில்நுட்பக் குழு நேற்று முன்தினம் வழங்கியது. (ரி)





# ரி-20 கிரிக்கெட் சாதனை படைத்த பாண்ட்யா



ரி-20 உலகக் கிண்ணத் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா நெதர்லாந்து அணிகள் மோதின. இந்த போட்டியில் இந்திய அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்த போட்டியில் ஒரு விக்கெட் மற்றும் 30 ஓட்டங்கள் விளாசியதன் மூலம் ஹர்திக் பாண்ட்யா வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ரி-20 கிரிக்கெட்டில் 6000+ ஓட்டங்கள், 200+ விக்கெட்டுகள் எடுத்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையை ஹர்திக் பாண்ட்யா படைத்தார்.

இந்தச் சாதனையைச் செய்த உலகின் 6 ஆவது ஆல் ரவுண்டர் இவராவார். இவருக்கு முன்னதாக கீரன் பொல்லார்ட், ஆண்ட்ரே ரசல், ஷகிப் அல் ஹசன், முகமது நபி மற்றும் டுவைன் பிராவோ ஆகியோர் இந்த இரட்டை மைல் கல்லை எட்டியுள்ளனர்.

ரி-20 போட்டிகளில் ரவீந்திர ஜடேஜா மற்றும் அக்சர் படேல் ஆகியோர் 200 விக்கெட்டுகளைக் கடந்திருந்தாலும், 6000 ஓட்டங்கள் என்ற இலக்கை இன்னும் எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 மாத காலமாக பெறப்படாத விவசாயிகளின் ஓய்வூதியம்

## இடைநிறுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)
தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு மேலதிகமாக விவசாய ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளாதவர்களின் ஓய்வூதிய கொடுப்பனவை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கமநல மற்றும் கமநல சேவைகள் காப்புறுதி சபை ஊடாக வருடாந்தம் 79,215 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

அத்துடன் 6,381 கடற்றொழிலாளர்களுக்கும் ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் சுமார் 6,105 பேர் 6 மாதங்களுக்கு மேலதிகமாக ஓய்வூதிய கொடுப்பனவை பெற்றுக்கொள்ளவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஏற்படக்கூடிய நிதி முறைகேடுகள் மற்றும் ஊழலை தடுக்கும் நோக்கில் அவர்களின் ஓய்வூதிய கொடுப்பனவை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் 1918 என்ற துரித இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிவேக வீதிகளில் ஆசனப்பட்டி; சட்டத்தை மதிக்காத அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)
அதிவேக வீதிகளில் ஆசனப்பட்டி இன்றி வாகனங்களை அனுமதிக்கும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் டபிள்யு.பி.ஜே.சேனாதீர தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அதிவேக வீதிகளில் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், ஆசனப்பட்டி இல்லாத வாகனங்களில் அவற்றை பொருத்துவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசமும் தற்போது நிறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

அதிவேக வீதிகளில் உள்ள 31 நுழைவாயில்களிலும் இந்த நடைமுறையை கடுமையாக பின்பற்றுவதற்கு அதிகாரிகள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார். (நி)

# தடையற்ற முறையில் எரிவாயு தேவையற்ற அச்சம் வேண்டாம்

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)
எதிர்காலத்தில் தடையற்ற முறையில் எரிவாயு விநியோகத்தை முன்னெடுப்பதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் பொதுமக்களுக்கு உறுதி அளித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட இரண்டு நாள் விநியோகத் தடை மற்றும் சந்தையில் ஏற்பட்ட எதிர்பாராத கேள்வி அதிகரிப்பு காரணமாக தற்காலிகமாக விநியோகத் தட்டுப்பாடு நிலவியதாக நிறுவனம் விளக்கியுள்ளது.

இந்த வாரத்திற்குள் அதிகளவிலான எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் 284,000 வீட்டு உபயோக எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் சனிக்கிழமை வரை மேலும் 351,000 எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எரிவாயு தட்டுப்பாடு குறித்து பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் வழக்கம் போல் எரிவாயு கொள்கலன்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் லிட்ரோ நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 400 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 160 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 350 | 350 | 350 |
| தக்காளி | 150 | 150 | 200 | 250 | 150 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 180 | 180 | 100 |
| கோவா | 200 | 200 | 200 | 250 | 200 | 200 |
| கரட் | 250 | 350 | 400 | 400 | 350 | 330 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 | 100 | 100 |
| புடோல் | 150 | 150 | 150 | 150 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 250 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 250 | 230 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 | -- | -- |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 600 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 350 | 200 | 400 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | 300 | -- | 230 |
| பயற்றங்காய் | 600 | 400 | 400 | 450 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 400 | 400 | 400 | 280 | 300 |
| பீற்றூட் | 300 | 250 | 200 | 250 | 200 | 180 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 700 | 500 | 600 |
| முருங்கைக்காய் | -- | 3500 | 4000 | 3000 | 2500 | -- |
| போஞ்சி | 400 | 300 | 400 | 400 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80-140 | 150 | 150 | -- | 100 |
| தேசிக்காய் | 100 | 80 | 200 | 200 | -- | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 550 | 400 | 450 | -- | 375 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளாங்கி | 100 | 100 | 200 | 200 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 120 | -- | 110 |

# இராசிபலன்

20.02.2026
மாசி 08, வெள்ளிக்கிழமை
திருதியை பிற்பகல் 3.56 மணிவரை

உத்திரட்டாதி முன்னிரவு 9.23 மணிவரை
சுப நேரம் 6.32-8.02 மணிவரை
இராகுகாலம் 11.02-12.32 மணிவரை

சித்தாமிர்தம்,
சுப முகூர்த்த நாள்

வளவன்




கொடுக்கல் வாங்கலக்கில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் புதிய மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.




உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், அரசு வழியில் எதிர்பார்த்த ஆதாயமுண்டு.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், உடல் நலன் சீராகும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




பெண்களின் சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பழைய பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.




பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், உங்கள் முன்னேற்றத்தில் உடன் பிறப்புக்கள் அக்கறை காட்டுவர்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும், எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் வாய்ப்புண்டு.




வழிபாட்டால் திருப்தி காணும் நாள், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

பொறுமையுள்ளவன் எதை விரும்பினாலும் பெறலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு

# A-35 வீதி பாலம் ஊடாக கனரக வாகனங்கள் செல்லத் தடை!

### வீதி அபிவிருத்தி அதிகார சபை

**(தருமபுரம்)**

**முல்லைத்தீவு A-35 வீதியிலுள்ள இல. 11/1 (இந்தியன் பாலம்) பாலத்தினூடாக கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக குறித்த சபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி பாலமானது அண்மையில் ஏற்பட்ட "டித்வா" புயலின் பின்னர் இந்திய அரசாங்கத்தினால் தற்காலிக பாலமாக அமைக்கப்பட்டு பொதுப்பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மைக் காலமாக இப்பாலத்தில் அடிக்கடி ஏற்பட்ட பாதிப்புக்களைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட தரப்புகளின் நேரடியான கள விஜயம் மற்றும் கலந்துரையாடல்களின் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய கனரக வாகனங்களுக்கான போக்குவரத்து மட்டுப்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில் பேருந்து தவிர்ந்த அனைத்து விதமான கனரக வாகனங்களும் இப்பாலத்தினூடாக பயணிப்பது முற்றாக தடைசெய்யப்படுகின்றது.

பயணிகள் பேருந்து சேவையானது பயணிகளை இறக்கி விடப்பட்டு பின்னர் பாலத்தினூடாக பயணிக்க முடியும்.

ஏனைய அனைத்து வாகனங்களும் குறிப்பிட்ட வேகக் கட்டுப்பாட்டுடன் பயணிக்க முடியும்.

எனவே நிலைமையின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு மேற்படி அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (8-316)



இணுவில் கலை இலக்கிய வட்டம் அண்மையில் நடாத்திய 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கவிஞர் கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய "தேடிய தேட்டங்கள்" கவிதைத் தொகுப்பு நூலை வாழ்நாள் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் வெளியிட்டு வைக்க முன்னாள் யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

# அத்துமீறிய மீன்பிடி
## 22 இந்திய மீனவர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு படகுகளுடன் 22 இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் இரண்டு படகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 12 கடற்றொழிலாளர்களும் மன்னார் கடற்பரப்பினுள் இரண்டு படகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 10 கடற்றொழிலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களையும் அவர்களின் படகுகளையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அந்தந்த பிரதேச கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (8-33)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மத்தி பெருங்காடு மூத்தநயினார் புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய மகோற்சவ திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முதலி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் பங்குனி மாதம் 1 ஆம் திகதி காலை 10 மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாசி மாதத் தீர்த்தமும் மறுநாள் இரவு 7 மணிக்கு பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையும்.

"கிரியா கலாபமணி" சிவஸ்ரீ இரத்தின திருக்குமரக் குருக்கள் தலைமையில் மேற்படி மஹோற்சவம் நடைபெறும் என பரிபாலன சபை செயலாளர் இ.கிருபாகரசூரியன் தெரிவித்துள்ளார். (6)

# சதுரங்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை திருமகள் சன சமூக நிலைய பவள விழா வினை முன்னிட்டு யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்துடன் இணைந்து நடத்தும் வட மாகாண ரீதியிலான சதுரங்க சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களுக்கான முடிவுத்திகதி 23.02.2026. போட்டிகள் 28.02.2026-01.03.2026 வரை அரியாலை கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு 076 682 9413, 075 289 7911 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (நி-8)



நாக தேவியின் பக்தி கானங்கள் இறுவெட்டு வெளியீட்டு விழா பருத்தித்துறை பன்னையம்பதி நாகபூசணி அம்மன் ஆலய தர்மகர்த்தா ஜெயாநந்தம் ஜெயகோபி தலைமையில் அண்மையில் பருத்தித்துறை பன்னையம்பதி நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)

# வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த 2 மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரை!

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தபால் நிலைய வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார்சைக்கிள்கள் இனந் தெரியாத நபர்களினால் தீக் கிரையாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீட்டுக் கண்ணாடி உள்ளிட்ட பொருட்களும் அடித்து சேதமாக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியர் ஒருவருடைய வீடு ஒன்றிலேயே இவ்வாறு அசம்பாவிதம் இடம்பெற்றுள்ள நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8-30)

# கட்டைக்காட்டு படுகொலையின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் 32 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கட்டைக்காடு சென்.மேரிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இதன் போது, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மலர் மாலை அணிவித்து சுடர்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதேவேளை படுகொலையை நினைவுகூரும் நினைவுத் தூபிக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

1994 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி அதிகாலை சுண்டிக்குளம் தொடுவாய் வாய்க்கால் கடற்பரப்பில் கட்டு மரங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினர் டோரா படகுகளில் வந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 10 கடற்றொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். (8-33-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி புனரமைப்பு



(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாக பல வருட காலமாக நிரந்தர புனரமைப்பின்றி காணப்பட்டது.

இந் நிலையில் தற்போது அரசாங்கத்தின் 61 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. (8-316)

# டைனமைட் வெடிபொருட்களுடன் இரண்டு மீனவர்கள் கைது!

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் டைனமைட் வெடி பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் இரு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தமது உடைமையில் டைனமைட் வெடிபொருளை வைத்திருந்த இரு மீனவர்களையும் ஓலைத்தொடுவாய் கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களிடம் மூன்று தொகுதி டைனமைட் வெடி பொருள் மீட்கப்பட்ட நிலை யில் இரு சந்தேக நபர்களையும் மன்னார் கடற்றொழில் நீரியல் வளதிணைக்களத்தினரிடம் ஒப்படைத்திருந்தனர்.

மேலதிக விசாரணையின் பின்னர் குறித்த இரு சந்தேக நபர்களையும் நேற்றைய தினம் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (8-285)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை

## கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களம்

(மன்னார்)

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களில் தெரிவு செய்யப்பட்ட 36 மீனவர்களுக்கு மீன்பிடி வலை தொகுதி வழங்கும் நிகழ்வு நேற்று காலை மன்னார் மாவட்ட கடற் றொழில் திணைக்களத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத் தில் மீனவர்களுக்கு உதவித் திட்டங்கள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக் கைகளுக்கு எதிரான கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீனவர்களுக்கான புதிய வலை உபகரணங்கள் வழங்கும்போது அவை கடற்றொழில் திணைக்களத்தின் அனுமதி பெற்றவையாக இருக்க வேண்டும். தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புயல் மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக ஐந்து பேர் கொண்ட ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு சேதங்கள் கணக்கிடப்பட்டு இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மன்னார் பகுதியில் சமீப காலமாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

மேலும் சுற்றுச்சூழல் மற்றும் மீன் வளப் பாதுகாப்பு கருதி டிரக்டர் இயந்திரம் மூலம் கரைவலை இழுப்பதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இது குறித்து மீனவர் சங்கங்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் பாரம்பரிய முறையில் கைகளால் வலை இழுக்க அனுமதி உண்டு. ஆனால் இயந்திரங்கள் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். (8-285)

# பருத்தித்துறையில் கவனயீர்ப்பு போராட்டம்!

(கரணவாய்)

வடமராட்சி - கரவெட்டியை சேர்ந்த ஊடகவியலாளர் சு.இராமச்சந்திரன் கடந்த 15.02.2007 அன்று இராணுவத்தினர், ஒட்டுக் குழுவினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு 19 ஆண்டுகள் கடந்துள்ளது.

இந் நிலையில் குறித்த சம்பவத்திற்கு நீதி கோரி யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பேருந்து நிலையம் முன்பாக நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது. (8-60)

# சேவைநலன் பாராட்டு

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து"

எமது கல்லூரியில் கடந்த 01.08.2022-20.02.2026 காலப்பகுதியில் அரசறிவியல் விஞ்ஞான ஆசிரியராக அர்ப்பணிப்போடு சேவையாற்றிய திருமதி ஜெயந்தி சிவோதயன், அன்போடும் பண்போடும் மாணவர்களை அரவணைத்து ஆழமான கல்வியைப் புகட்டியதோடு நல்மாணக்கர்பலரை உருவாக்கி அவர்களை கலங்கரை விளக்குகளாய், விளங்கிடதுடிப்புடன் செயற்பட்டவர்.

இவர் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற பொறுப்பாசிரியராகவும் விளங்கி மாணவர் பாராளுமன்றம் நடாத்திய பெருமைக்குரியவர் இவை மட்டுமன்றி கல்லூரியின் பல செயற்பாடுகளுக்கு உறுதுணையாக நின்றவர். மற்றும் மாணவர் கல்வியில் உயர் பெறுபேறுகள் பெற்றுக் கொள்வதற்கு தனித்துவமான ஆசிரியராக விளங்கியவர். இவருடன் உரையாடும் போது மிகவும் அமைதியாக உரையாடுவார். இவர் தனது ஓய்வுக்காலத்தில் பயனுள்ள வகையில் குடும்பத் துடன் சிறப்பாக மகிழ்வாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மனதார வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகு அவாம்
பேரறிவாளன் திரு"

திரு.பெ.வசந்தன், அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பணிநிறைவு வாழ்த்து

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"
கல்விப்பணியே கடவுட்பணியென
கற்றுவல்ல ஆசானாய் விளங்கி
எளிமையாய் போதித்து மாணவர்
ஏற்றமுற ஏணிப்படியாய் விளங்கி
கதிரவன் ஒளிபோல் பாரினில் ஒளிபரப்பி
அன்பும் பண்பும் அறிவும் நல்ல பழக்கமும்
இன்முகத்துடன் புகட்டி
அரசறிவியல் பாடத்தினை அன்பாக போதித்து
நல் மாணக்கர் பலரை உருவாக்கி
ஆசிரியர்கள் மனதிலும் இடம் பிடித்து
இளமைத் துடிப்புடன் வலம் வந்திடுவார்
சேவைக்காலமும் சுழன்று வந்திடவே
ஓய்வுக்காலமதனில் சேவைதனை நினைத்து
மகிழ்ந்திடவே மணிவிழா நாயகியை மனதார
வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்

செயலாளர்,
ஆசிரியர் நலன்புரிக்கழகம்.



திருமதி.ஜெயந்தி சிவோதயன்
(BA, Dip in edu, SLTS-I)

சைவசித்தாந்தரத்தினம் (திருவாவடுதுறை ஆதீனம்)
திருமுறைச் செல்வர்.

### சேவை விபரம்

- யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் 15.07.1998 - 13.06.2010
- யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் 14.06.2010 - 31.12.2010
- கிளி/நாகேந்திரா வித்தியாலயம் 01.01.2011 - 31.05.2011
- கிளி/பளை மத்திய கல்லூரி 01.06.2011 - 31.12.2012
- யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி 01.01.2013- 31.07.2022
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 01.08.2022-20.02.2026

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



எமது யாழ் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கொக்குவில் இந்துக்கல்லூரியில் இருந்து தனது ஆசிரியர் சேவையை முடித்து ஓய்வு பெறும் திருமதி ஜெயந்தி சிவோதயன் அவர்களை மனதார நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

அமைதியான, அடக்கமான முரண்பாடற்ற, அன்பாக சேவை யாற்றிய ஓர் அற்புத ஆளுமை இவர். மாணவ பாராளுமன்ற செயற்பாடுகள் மூலம் மாணவர் ஆளுமையை விருத்தி செய்த ஒருவர். இவரது ஓய்வுக் காலம் சிறக்க இறைவனை வணங்கி யாழ் வலயக்கல்வி பணிமனை சார்பில் வாழ்த்துகின்றேன்.

திருமதி. மாலதி முகுந்தன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,யாழ். கல்வி வலயம்.

## வாழ்த்துச் செய்தி

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்ற வாக்கிற்கு இணங்க அன்பையும், மற்றவர்களைத் தன் அன்பால் அரவணைத்து எமது கல்லூரியில் மூன்றரை வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திருமதி ஜெயந்தி சிவோதயன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

உயர்தர வகுப்பின் அரசியல் பாடத்தையும், குடியுரிமைக் கல்வியையும், மாணவர் பாராளுமன்றத்தையும் சிறப்புற பங்காற்றி ஓய்வு பெறும் இந்நாளில் மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி.சகிலா மயூரன்,
தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

## பகுதித் தலைவரின் வாழ்த்துச் செய்தி

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

எமது கல்லூரியில் ஆசிரிய பணியை செவ்வனே ஆற்றி ஓய்வுபெறும் திருமதி ஜெயந்தி சிவோதயன் அவர்கள் "கேட்டார் பிணிக்கும் தகையவராய்" மாணவர் மனங்களில் அறிவின் விதையை ஆழப்படுத்தும் திறன் வாய்ந்தவர்.

ஆழ்புலமையும் ஆரவாரமில்லா அமைதியும், கனிவான பேச்சும், உள்ளும் புறமும் மாசில்லாத் தூய்மையும், தாய்மை அன்பும் கொண்டு மாணவர்களை அணுகும் பண்பு இவருக்கே உரிய தனித்துவமாகும். கல்விப் புலத்தில் பல மாணவர்களை ஒளி விளக்காகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்த அரும் பணியால் எமது கல்லூரி அன்னைக்குப் பெருமை சேர்த்தவர். இன்று அகவை அறுபதை நிறைவு செய்யும் வேளையில், இவர் தனது ஓய்வுக் காலத்தைக் குடும்பத்துடன் மனநிறைவோடும் மகிழ் வோடும் பகிர்ந்து நீண்ட காலம் வாழ இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திரு.ச. சந்திரசேகர்,
பகுதித் தலைவர்- கலைப்பிரிவு.

(C-5022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாரதம்

# நெருங்கும் தமிழக சட்ட சபைத் தேர்தல்!



(டில்லி)

**தமிழகச் சட்டசபைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் சூழலில், சட்ட சபைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்த இந்திய தேர்தல் ஆணையகத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார், எதிர் வரும் 26, 27 ஆகிய திகதிகளில் சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார்.**



தமிழகச் சட்டசபைத் தேர்தல் களம் பரபரத்துக் கொண்டிருக்கிறது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை இந்திய தேர்தல் ஆணையகம் மேற்கொண்டுள்ளது.


இந்நிலையில் தலைமைத்தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், சென்னையில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள், மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

ஏற்கனவ, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, எதிர்வரும் சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, மாவட்டங்களில் வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிப்பது மற்றும் வாக்கினை உறுதி செய்வது குறித்து செயல்முறை விளக்கங்களை மாவட்ட நிர்வாகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் 23 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. (நி)

## ஏ.ஐ. உச்சி மாநாட்டை தொடக்கி வைத்தார் மோடி

### உலகத் தலைவர்கள் பலர் பங்கேற்பு



(டில்லி)

செயற்கை நுண்ணறிவுத் தாக்கம் தொடர்பான உச்சிமாநாட்டின் நிகழ்வுகளை டில்லி பாரத மண்டபத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுக் காலை தொடக்கி வைத்தார்.

தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்று பிரதமர் மோடியுடன் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில், பங்கேற்கும் பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார். மேலும், நிர்வாகம், உட்கட்டமைப்பு, சர்வதேச ஒத்துழைப்பு என ஏஐ தொழில்நுட்பத்தின் தேசிய மற்றும் உலகளாவிய தேவைகள் குறித்த விவாதம் நடைபெறவுள்ளது.

மக்கள், பூமி மற்றும் முன்னேற்றம் ஆகிய மூன்று கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் இந்த மாநாட்டில் 20 நாடுகளின் தலைவர்கள், 60 அமைச்சர்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்ட அரச பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

கூகுள், ஓபன்ஏஐ, மைக்ரோசாஃப்ட் என பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் உட்பட 500இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர். (நி)

## சீனாவின் வசந்த விழாவில் தற்காப்புக் கலை நடனத்தை நிகழ்த்திய மனித ரோபோக்கள்



(பீஜிங்)

சீனாவின் வசந்த விழா காலாவில், மனித உருவ ரோபோக்கள் சிக்கலான தற்காப்புக்கலை நடனத்தை மேடையில் நேரடியாக நிகழ்த்தியுள்ளன.

இளம் குங்ஃபூ கலைஞர்களுடன் இணைந்து ஒரு சிலிர்ப்பூட்டும் தற்காப்புக் கலை நிகழ்ச்சியை மனித உருவ ரோபோ குழு நடத்தியது.

இக்கொண்டாட்டம் இந்த ஆண்டு உலகளாவிய தொழில்நுட்பக் காட்சியாக மாறியுள்ளது.

இது ரோபாட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு முன்னேற்றங்களை வெளிப்படுத்தும் வகையாக அமைந்தது.

யுனிட்ரீ ரோபாட்டிக்ஸ் உருவாக்கிய G1 ரோபோக்கள், தன்னாட்சி குங்ஃபூ கலையை நிகழ்த்தியுள்ளன.


இதன்மூலம், பாரம்பரிய கலை வடிவங்களை மேம்பட்ட AI கட்டுப்பாடு மற்றும் ரோபோ ஒருங்கிணைப்புடன் இணைத்து, சீனா தனது தொழில்துறை மற்றும் ரோபாட்டிக்ஸ் திறன்களை உலகிற்கு வெளிப்படுத்தியது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு


# ஈரான் மீது எந்நேரத்திலும் தாக்குதல்

## அமெரிக்காவின் முடிவால் பதற்றம்



(டெஹ்ரான்) ••••••••••••

அணுசக்தி ஒப்பந்தம் செய்வதில் ஈரான் இழுபறியைக் கடைபிடிப்பதால் மேற்கு ஆசியாவில் அமெரிக்கா முழுமையான போருக்கான இராணுவ தளவாடங்களை பெருமளவு குவித்துள்ளது. இது எந்நேரமும் தாக்குதல் நடக்கலாம் என்ற பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.



மேற்காசியா நாடான ஈரான் - அமெரிக்கா இடையே அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் இரண்டாம் சுற்றுப் பேச்சு நடந்து வருகிறது.

இந்த முறை ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால், ஈரானுக்கு அது மோசமான நாளாக இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்திருந்தார். ஈரானை அச்சுறுத்தும் வகையில் இரு விமானம் தாங்கி போர் கப்பல்களையும் மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் நிறுத்தியுள்ளார்.

இதுகுறித்து ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி, “போர்க் கப்பல் ஆபத்தானதுதான்.

ஆனால், அதை கடலுக்குள் மூழ்கடிக்கும் ஆயுதம் எங்களிடம் உள்ளது” எனப் பதிலடி கொடுத்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்கா கடந்த 24 மணி நேரத்தில் 50இற்கும் மேற்பட்ட நவீன போர் விமானங்களை மேற்காசியா நோக்கி அனுப்பி வைத்துள்ளது.

இதற்கிடையே ஈரான் கட்டுப்பாட்டில் உள்ள ஹார்முஸ் நீரிணை அந்நாட்டு இராணுவத்தின் போர் பயிற்சிக்காகத் தற்காலிகமாக மூடப்பட்டது.

இதனால் எந்நேரமும் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் சூழல் உருவாகியுள்ளது. (நி)

# சீனாவுடன் இரகசிய தொடர்பு

## பெரு ஜனாதிபதி அதிரடி நீக்கம்

(லிமா)

உலகின் இளம் ஜனாதிபதி என்று பெயரெடுத்த பெரு நாட்டின் இடைக்கால ஜனாதிபதி ஜோஸ் ஜெரி, அதிரடியாகப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தென்னமெரிக்க நாடான பெரு, பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் இருந்தாலும், ஊழல் மற்றும் அரசியல் குழப்பங்களால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது. அங்கு, கடந்த 10 ஆண்டுகளில் இதுவரை ஏழு ஜனாதிபதிகள் மாறியுள்ளனர்.

பெரும்பாலானோர் ஊழல், அதிகார துஷ்பிரயோகம், தகுதியின்மை போன்ற காரணங்களால் பாராளுமன்ற உறுப்பினர்களால் நீக்கப்பட்டனர்.

முதல் பெண் ஜனாதிபதியாக இருந்த டினா பொலுவார்டே, அரசியல் போராட்டங்கள், சொத்துக் குவிப்பு வழக்குகள் காரணமாக கடந்த ஆண்டு நீக்கப்பட்டார்.

நம் அண்டை நாடான சீனாவின் தொழிலதிபர் ஜிஹுவா யாங்கை இரகசியமாக சந்தித்தது, சீன உணவகத்துக்கு முகத்தை மறைத்து சென்றது என பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

யாங்கின் நிறுவனத்துக்கு, பெரு அரசின் எரிசக்தி திட்டத்தில் ஒப்பந்தம் இருந்தது தெரியவந்ததால், ஜெரி மீது ஊழல் வழக்கு விசாரணை தொடங்கியுள்ளன.

இதையடுத்து, பெரு பாராளுமன்றில் நடைபெற்ற வாக்கெடுப்பில், 75 எம்.பி.க்கள், ஜோஸ் ஜெரியை நீக்குவதற்கு ஆதரவாகவும், 24 பேர் எதிர்ப்பு தெரிவித்தும் வாக்களித்தனர் மூன்று பேர் வாக்களிப்பைத் தவிர்த்தனர்.

இதையடுத்து, ஜோஸ் ஜெரி கடந்த ஆண்டு ஒக்டோபரில் பதவியேற்றார்.

ஆட்சிக்கு வந்து வெறும் நான்கு மாதங்களே ஆன நிலையில், அவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதனால், ஜெரி உடனடியாகப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

வரும் ஏப்ரல் மாதத்தில் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், நாடு மீண்டும் அரசியல் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாநகர சபைக்கு பதில் ஆணையாளர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வவுனியா மாநகர சபையின் ஆணையாளராக (பதில்) திருமதி சிவச்செல்வன் சிவரஞ்சினி நியமிக்கப் பட்டுள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற நிகழ்வில், ஆளுநர் இதற்கான நிய மனக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

இந்நியமனமானது நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

இவர் இதற்கு முன்னர் வவுனியா மாவட்ட தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகக் கடமை யாற்றியவர் என்பது குறிப்பிடத்தக் கது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளு நரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதி நாதன் ஆகியோர் கலந்துகொண்ட னர். (8)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L,Shop
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16559

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்- 5'9"
தகைமை/தொழில்- BBA, Senior Analyst
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16561

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
2இல்செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc, Engineer (Australia)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16562

பிறப்பு: 1990-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி-பா: 69 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்-Bcom, DO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16563

பிறப்பு: 1999- இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: Degree, German
எதிர்பார்ப்பு: only German
தொ.இ: B/16565

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி-பா: 5
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: PHD, ஜேர்மனி
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16568

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
12 இல் செவ்
கி-பா: 31 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: College, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16569


பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்-மிருகசீரிடம்
1 இல் செவ்
கி-பா: 62
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BEd, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16577

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: சித்திரை
8 இல் சூரிசெவ்
கி.பா: 68
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - BSc
எதிர்பார்ப்பு: பட்டதாரி. உத்தியோகம்
தொ.இ: G/16579

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்:ரோகினி
10 இல் சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்- A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/16582

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 544



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனதை அழிப்பது எப்படி?

நம் ஆள் ஒருவன் ஒரு பெரியவரிடம் போய் "பிரம்மத்தை அடைவதற்கு வழி என்ன" என்று கேட்டான். ஏதோ பெரம்பலூருக்குப் போவதற்கு வழி சொல்லுவது மாதிரி கேட்டான்.

அவர் சொன்னார். "மனது அழிந்தால்தான் பிரம்மத்தை அடைய முடியும்" என்று. அதை எப்படி அழிப்பது? " என்றான் இவன்.

மனதைக் கொண்டே மனதை அழிக்க முடியும்!" என்றார். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்புறம் வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். மனதை மனதைக் கொண்டே அழிக்க முடியும் என்கிறார். பதஞ்சலி மகரிஷி.

மனதுக்கு இரண்டு குணங்கள் உண்டு.

ஒன்று, பலவிதமான எண்ணங்களிலே குழம்பியிருக்கின்ற நிலை இன்னொன்று எப்போதாவது சில சமயங்களிலே ஒரே எண்ணத்திலே நிலைத்திருக்கின்ற நிலை.

அறிவியல் வல்லுநர்கள் ஒரே எண்ணத்திலே ஆழ்ந்துபோய் இருப்பார்கள். அதனாலேதான் புதுப்புது உண்மைகளைக் கண்டு பிடிக்க முடியுது.

ஒரு குழந்தைக்கு ஆபத்து என்றால் அம்மாவோடு நினைப்பு முழுவதும் குழந்தை பேரிலேயே இருக்கும்.

இப்படித் தன்னையறியாமல் சில சமயங்களிலே ஒரே எண்ணத்திலே நிலைத்திருக்கின்ற மனத்தை நாம் அறிந்தே அது ஒரே எண்ணத்திலே நிற்கும்படியாகப் பழக்க வேண்டும்.

பதஞ்சலி முனிவர் இதற்கு ஒரு சுலபமான வழியைச் சொல்கிறார். வேதாந்தத்திலே "சந்திர சாகா நியாயம்" என்று ஒரு வழி உண்டு. அதாவது சந்திரனை ஒரு மரக்கிளையைக் கொண்டு காட்டுதல்.

ஆகாயத்திலே இருக்கின்ற மூன்றாம்பிறையை ஒருவருக்குக் காட்ட வேண்டும் என்று வையுங்களேன். திடீர் என்று சுட்டிக்காட்ட முடியாது.

முதலிலே ஒரு மரத்தைக் காட்ட வேண்டும். அப்புறம் கிளையைக் காட்ட வேண்டும். அதன்பின் இலையைக் காட்ட வேண்டும் "அதற்கு நேராகப் பார் மூன்றாம்பிறை தெரியும் என்று சொல்ல வேண்டும்!" இதே வழியிலே மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும்.

இப்போது உதாரணத்திற்கு ஒருவர் ஒரு இசை நிகழ்ச்சிக்குப் போகிறார். முதலிலே மனது என்ன நினைக்குது. பாடப்போகும் கலைஞரைப் பற்றி நினைக்க ஆரம்பிக்குது. அதன்பின் அந்த சங்கீத வித்துவான் மறைந்து விடுகிறார். சங்கீதம் தான் மனதுக்குள்ளே நிற்குது.

அதன்பின் அதுவும் மறைந்துபோய். அந்த சங்கீதத்தை அனுபவிக்க நான் என்பது மட்டும் மனதிலே நிற்குது. பழக்கத்தினாலே இதுமாதிரி நிலையை அடிக்கடி அடைய வேண்டும்.

மனது இருக்கிறதே. அதனுடைய குணம் எப்படித் தெரியுமா?

அது ரொம்ப நேரம் வரைக்கும் ஒரே நிலையிலே இருக்காது. நாம் பழக்கத்தினாலே இந்த நிலைக்குக் கொண்டுவர முடியும். இந்த நிலைக்கு வந்ததும் மனது என்ன ஆகும் தெரியுமா?

ஒன்று பழைய பல எண்ணங்கள் உள்ள நிலைக்கு வரும். அல்லது அந்த ஒரு எண்ணமும் மறைய அதன் காரணமாக மனது அழிய அது பிரம்மத்தை உணரும். இந்த முயற்சியில் தடங்கல்கள் ஏற்படலாம். அப்போது தியானம் அவசியம் என்கிறார் மகரிஷி பதஞ்சலி!

இந்தக் காலத்திலே ஒரு ஆசாமி.

தன்னுடைய மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஒரு பெரியவரிடம் போய் "ஏதாவது வழி சொல்லுங்கள்" என்றான்.

"இன்றைக்கு இரவு உனக்கு மூன்றாம் பிறையைக் காட்டி பயிற்சி கொடுக்கிறேன்" என்றார்.

அதே மாதிரி இரவு அவரிடம் போய் நின்றான். அவர் அவனை பக்கத்திலே நிற்க வைத்துப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார். இதோ பார் நான் சொல்வதைத் தீவரமாகக் கவனி. அதோ தெரியுது பார் ஒரு பெரிய ஆலமரம். அந்த மரத்திலே வலது பக்கமாக ஒரு பெரிய கிளை போகிறது பார்.

அந்த வலது பக்க கிளையின் நுனியிலே ஒரு இலை தெரியுது பார். அந்த இலைக்கு நேராகப் பார்வையைச் செலுத்து. நிலாதெரியும்" என்றார். இவன் நன்றாகக் கூர்ந்து கவனித்தான். ரொம்ப நேரம் கவனித்தான். அதன்பின் இவரைப் பார்த்து,

"தெரியவில்லையே" என்றான். "அதெப்படி தெரியாமல் போகும். நன்றாகக் கவனித்துப்பார்" என்றார்.

"எப்படிப் பார்த்தாலும் நிலா தெரியாது" என்றான். "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றார். "இன்றைக்கு அமாவாசை" என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லியடியில்

# தெருநாய்கள் அட்டகாசம் பீதியில் மக்கள்

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள பொதுச் சந்தை, மீன் மற்றும் மரக்கறி சந்தைப் பகுதிகளில் தெரு நாய்களின் பெருக்கம் அதிகரித்து வருவதுடன் சந்தைக்கு வரும் பொது மக்களை நாய்கள் கடிக்கத் துரத்துவதும், சில தருணங்களில் காயம் ஏற்படுத்துவதுமாக உள்ளதால், மக்கள் மிகுந்த அச்சத்துடன் அங்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சந்தைப் பகுதியிலுள்ள சில உணவகங்கள் மற்றும் கடைகளில் இருந்து வீசப்படும் மீதமுள்ள உணவுகளை உண்பதற்காக நாய்கள் கூட்டமாகத் திரிகின்றன.

எனவே பொது மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு, சந்தைப் பகுதிகளில் அச்சுறுத்தலாக விளங்கும் தெரு நாய்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நெல்லியடி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (8-60)

# யாழ்ப்பாணம் சிறந்த சுற்றுலா மையம் பிரபல சஞ்சிகை சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பல தசாப்த கால உள்நாட்டு யுத்தத்தின் பிறகு, யாழ்ப்பாணம் அதன் காட்சிகள், ஒலிகள் மற்றும் சுவைகளைப் பற்றி ஆர்வமுள்ள பார்வையாளர்களுக்கு மீண்டும் திறக்கப்படுகிறது என உலக பிரசித்தி பெற்ற சுற்றுலா சஞ்சிகையான Condé Nast Traveller தெரிவித்துள்ளது.

"யாழ்ப்பாணம் கட்டாயமாக சுற்றுலா செல்லவேண்டிய இடம்" என அந்த சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாம் யாழ்ப்பாணத்தை அடையும்போது, அது முற்றிலும் ஒரு வேறுபட்ட உலகமாக உணரப்படுகிறது.

2009 வரை நீடித்த அந்த அழிவுகரமான உள்நாட்டுப் போரின் மையப்புள்ளியாக இது இருந்ததுடன், நீண்ட காலமாக நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் 13 ஆம் நூற்றாண்டில் ஒரு தமிழ் இராச்சியத்தின் தலைநகராகவும், பல நூற்றாண்டுகளாகத் தமிழ் கலாசாரம் மற்றும் இலக்கியத்தின் மையமாகவும் விளங்கியது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலான போர், தனிமைப்படுத்தல் மற்றும் 2004 சுனாமியின் வடுக்களுக்குப் பிறகு, இது தற்போது மெல்ல மீண்டெழுந்து வருகிறது. தென்னிலங்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இலங்கையை அனுபவிக்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளை யாழ்ப்பாணம் வரவேற்கிறது.

கலாசார ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும், யாழ்ப்பாணம் கொழும்பை விட தென்னிந்தியாவிற்கு நெருக்கமானது.

காலனித்துவ காலக் கட்டடங்கள், பிரித்தானியக் கால மணிக்கூட்டுக் கோபுரம் மற்றும் நவீன விருந்தகங்கள் ஆகியவை சிதைந்த பங்களாக்கள், இந்து ஆலயங்கள் மற்றும் மென்மையான வண்ணங்கள் பூசப்பட்ட தேவாலயங்களுக்கு அருகிலேயே காணப்படுகின்றன.

போரின் போது எரிபொருள் மற்றும் விநியோகத்தடை இருந்தபோது, மிதிவண்டிகளே இங்கு ஒரே போக்குவரத்து சாதனமாக இருந்தன.

இன்றும் இங்கு அன்றாட வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாக மிதிவண்டி விளங்கி வருகிறது.

ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான வறண்ட காலம் பொதுவாக யாழ்ப்பாணத்தைப் பார்வையிட சிறந்த நேரமாகக் கருதப்படுகிறது எனவும் Condé Nast Traveller தெரிவித்துள்ளது. (க-8)

# முயற்சி திருவினை ஆக்கும்

## வெள்ளி நற்சிந்தனை 26



முனைவர் ச.மனோன்மணி

முயற்சி என்பது ஒருவருடைய செயற்பாட்டுத் திறனாகும். இதனை வினைத்திறன் என்றும் கூறுவர். மனிதனுடைய மகிழ்வான வாழ்க்கைக்கு முயற்சியே அடிப்படையானது. சோம்பலின்றிச் சுறுசுறுப்பாக இயங்கினால் எவ்லாவற்றையும் விரைவாகச் செய்து முடித்துவிடலாம். முயற்சியுடையவர்கள் பிறரால் இகழப்பட மாட்டார்கள். "முயல்தல்" என்னும் தொழிற்பாட்டின் பண்பான வடிவமே முயற்சியாகும். வினைத்திறன் மிக்கவர்களின் ஒரு செயலைத் தொடங்கினால் அதனை முடிக்கும் வரை முயற்சியோடு செயற்படுவர்.

மனிதவாழ்க்கையில் முயற்சி என்பது குழந்தைப் பருவம் தொட்டே ஒரு பயிற்சியாக உள்ளது. குழந்தை தனது உடலைப் புரட்டிக் குப்புறக் கவிழப் பெரு முயற்சி செய்கிறது. பின்னர் தலையைத் தூக்கி எல்லாவற்றையும் பார்க்கிறது. தொடர்ந்து தவழுதல், நடத்தல் போன்ற செயற்பாடுகளிலும் தனது முயற்சியால் வெற்றி பெறுகிறது. பேச்சு நிலையிலும் பல்வேறு முயற்சிகள் செய்து பிறரோடு தொடர்பாடலைச் செய்கிறது. அவ்வாறு முயற்சியைத் தொடராவிட்டால் அக்குழந்தையே வலுவிழந்த குழந்தையாகி விடுகிறது.

கல்வி கற்கின்ற பருவத்திலும் தொடர்பான முயற்சியே நல்ல பெறுபேறுகளைத் தரும். தேர்விலே ஒரு முறை தோற்றுவிட்டாலும் மீண்டும் விடாமுயற்சி செய்து உரிய வெற்றியைப் பெற முடியும். எப்போதும்



சோம்பியிருக்கக் கூடாது. எல்லாவற்றையும் எம்மால் செய்ய முடியுமென முயற்சி செய்ய வேண்டும். தெய்வத்தால் நிறைவேற்ற முடியாத செயலையும் முயற்சியால் உடலை வருத்திச் செயற்பட்டால் எல்லாவற்றையும் செய்து முடிக்கலாமென வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

பண்டைய வரலாற்று நூல்கள் பல மன்னர்களுடைய முயற்சிகளைப் பதிவு செய்து வைத்துள்ளன. போர்க்களத்திலே ஒருமுறை தோற்றால் அவர்கள் மீண்டும் முயற்சி செய்து வெற்றி பெற்றுள்ளனர். "முயற்சியின் தொடர்ச்சியை விடா முயற்சி" என்பர் ஆள்வினைத்திறனிற்கு முயற்சி இன்றியமையாதது. முயற்சியின் எதிரான செயல் சோம்பியிருத்தலாகும். சோம்பியிருத்தல் தனிமனித வளர்ச்சியை மட்டுமன்றி அவனைச் சார்ந்த எல்லோருடைய வளர்ச்சியையும் தடை செய்து விடும். பாரதியார் குழந்தைக்குக் கூறும் அறிவுரைகளில் "சோம்பல் மிகக்கெடுதி பாப்பா" என வற்புறுத்தியுள்ளார். அயர்ச்சி அடையாது தொடர்ந்து முயற்சி செய்பவர் விதியையும் வெல்லும் ஆற்றல் பெறுவர். முயற்சியை தனிமுயற்சி, கூட்டுமுயற்சி என இரு வகையாக நோக்கலாம். தனி முயற்சி என்பது ஒருவர் ஒரு செயற்பாட்டைத் தனியாக முயற்சித்து நிறைவேற்றல். இது தனிமனித ஆற்றலாகும். ஆனால் கூட்டுமுயற்சியாகவும் பல செயற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளன. மரதன் ஓட்டம், கயிறிழுத்தல், காற்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற விளையாட்டு நிகழ்வுகளில் பலர் கூட்டாகச் சேர்ந்து முயற்சி செய்தே வெற்றியைப் பெற வேண்டும். ஊரெல்லாம் ஒரு தேரை இழுத்து வருவதும் ஒரு கூட்டு முயற்சியாகும்.

இன்னும் அயராத முயற்சி எனவும் ஒரு செயற்பாடு உண்டு. விஞ்ஞானப் பொறிமுறைக் கண்டுபிடிப்புகள் பல இவ்வாறு நடந்துள்ளன. வானூர்தியைக் கண்டுபிடித்தவர்களின் வரலாறு இதற்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். அது அவர்களுடைய அயராது முயற்சியின் வெற்றியாகும்.

தமிழர் பணப்பாட்டு நிலையிலே சில பழமொழிகளும் முயற்சியைப் பற்றி விளக்கம் தருகின்றன. எறும்பு ஊரக் கற்குழியும். "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பவற்றை வகை மாதி ரியாக இங்கு குறிப்பிடலாம். சிறுவர்களிடையே முயற்சி புற்றிய எண்ணத்தைப் பதிய வைப்பதற்கு பல கதைப் பாடல்களும் தோன்றியுள்ளன.

"முயற்சி திருவினை ஆக்கும்" என்பதும் ஒரு முதுமொழியே. செல்வத்தைச் சேர்ப்பதற்கு முயற்சி வேண்டும். இதனை மனித வாழ்வியலில் நேரடியாகவே காணவாய்ப்புண்டு. பிறரது முயற்சி கண்டு பொறாமைப் படுவதில் பயனில்லை. தானும் முயற்சி செய்து பொருளைத் தேட வேண்டும். இன்னும் இன்று மனிதனுடைய உடல் முயற்சி தேவையில்லை என்ற எண்ணமும் வலுப் பெற்று வருகிறது.

விஞ்ஞானப் பொறிகளின் துணையால் எல்லா செயற்பாடுகளையும் செய்து முடிக்கலாம் என இளைய தலைமுறையினர் நம்பியுள்ளனர். ஆனால் மின் வலுவின்றேல் பொறிகள் இயங்காது. செயற்பாடுகள் தடைப்பட வாய்ப் புண்டு. மனித வலுவின் முயற்சியால் மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றலாம் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 983





அவர் என் பாட்டி. இன்னமும் பழையாறையில் உயிரோடு இருந்து வருகிறார். எழுபது வயது ஆன பிறகும் அவர் முகத்தில் விளங்கும் தெய்வீகமான அழகு கண்களைக் கூசச் செய்யும். அவருடைய அழகெல்லாம் இப்போது உன்னிடந்தான் தஞ்சம் புகுந்திருக்கிறது.

அது என்னிடம் இல்லை. இளைய பிராட்டியிடம் இல்லை, அருள்மொழியிடமும் இல்லை. என் தந்தையின் மூலமாக உன்னிடத்தேதான் வந்திருக்கிறது."

"ஐயா! இது என்ன சொல்கிறீர்கள்? உண்மையிலேயே எனக்குச் சித்தக் கோளாறுதான் போலிருக்கிறது. அல்லது என் காதுகளில் ஏதேனும் கோளாறு இருக்க வேண்டும்."

"இல்லை, நந்தினி இல்லை! சித்தக் கோளாறும் இல்லை. உன் காதிலே கோளாறும் இல்லை. நீ என் தந்தையின் மகள். ஆகையால் என் சகோதரி! சக்கரவர்த்தி என் அன்னையை மணப்பதற்கு முன்னால் ஈழ நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிலே ஒரு மாதரசியைக் காதலித்துக் காந்தர்வ மணம் புரிந்து கொண்டார். அவளுடைய புதல்வி நீ, ஆகையால் என் சகோதரி!" என்று கரிகாலர் ஆதுரம் ததும்பிய குரலிலே கூறினார்.

நந்தினி பெருந் திகைப்பு அடைந்தவள் போலச் சிறிது நேரம் ஆதித்த கரிகாலரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவளுடைய முகத்தில் தெளிவு தோன்றியது.

"ஐயா! இந்தச் செய்தியைத்தானா தாங்கள் காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு அறிந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆம் நந்தினி! அதை அறிந்ததும் ஏற்கெனவே விளங்காமலிருந்த பல விடயங்கள் எனக்கு விளங்கின."

"கோமகனே! தங்களுக்கு இந்தச் செய்தியை வழியிலே சொன்னவர் யார்? வல்லத்து இளவரசரா?" "அவன்தான்! ஆனால் அவனாகச் சொல்லவில்லை. இளைய பிராட்டி குந்தவை அவனிடம் சொல்லி அனுப்பினாள்!"

"ஆகா! தங்களையும் என்னையும் பிரித்து வைப்பதற்கு ஆதிநாளிலிருந்து எத்தனையோ சூழ்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். இன்னமும் அவர்களுடைய சூழ்ச்சிகள் முடிந்தபாடில்லை."

"நீ நினைப்பது தவறு நந்தினி! இதில் சூழ்ச்சி ஒன்றுமில்லை. சிறு பிராயத்தில் உன்னையும் என்னையும் பிரித்து வைப்பதற்குப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி செய்த முயற்சிகள் எனக்குப் புரியாமலிருந்தன. அதற்காக அளவில்லாத கோபம் அடைந்தேன். அவர் எவ்வளவு பயங்கரமான விபத்திலிருந்து நம்மைத் தடுத்துக் காப்பாற்றினார் என்று இப்போதுதான் தெரிகிறது.

ஆனால் உண்மையை அவர்கள் அப்போதே சொல்லியிருக்கலாம். சொல்லாத காரணத்தினால் உனக்குப் பெரும் அநீதி செய்தார்கள் எனக்கும் தீங்கு செய்துவிட்டார்கள். போனது போகட்டும். சென்றதையெல்லாம் நாம் இருவரும் மறந்து விடுவோம். மறக்க முடியாவிட்டாலும் மன்னித்து விடுவோம்."


"ஐயா! வல்லத்து இளவரசர் வழியில் தங்களைச் சந்தித்து இந்தக் கதையை மட்டுந்தான் சொன்னாரா? இன்னும் ஏதாவது சொன்னாரா?" என்று நந்தினி கேட்டாள். "கதை என்று ஏன் கூறுகிறாய், நந்தினி! உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்றார் ஆதித்த கரிகாலர்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கடவுளின் உதவி



ஓர் ஊரில் இராம பக்தர் ஒருவர் இருந்தார்.

"எதற்கெடுத்தாலும், இராமா! இராமா!" என்று பக்திப் பரவசத்துடன் சொல்லிக் கொண்டிருப்பார்.

ஒருநாள் வண்டி கட்டிக் கொண்டு வெளியூர் புறப்பட்டார். அவர் வழியில் வண்டி திடீரென்று குடை சாய்ந்துவிட்டது.

அப்பொழுது அந்த இராம பக்தர், "இராமா! என் வண்டி குடை சாய்ந்துவிட்டது. நீ வந்து அதைத் தூக்கிப் பழையபடி நிறுத்த வேண்டும்" என்று பல முறை வேண்டிக் கூவி அழைத்தார்.

ஆனால் இராமா வந்தபாடில்லை.

நேரம் ஆக ஆக இராம பக்தர் நம்பிக்கை இழக்கத் தொடங்கினார்.

"இராமனை அருளுள்ளம் கொண்டவன். அன்புக்குக் கட்டுப் படுபவன், பக்தர்களுக் காக எதையும் செய்யக் கூடியவன் என்று புகழ்கிறார்களே. அவை எல்லாம் பொய்தான் போலும், உண்மையாக இருந்தால் இந்நேரம் அவர் தனக்கு உதவி செய்திருக்க வேண்டுமே" என்று எண்ணத் தொடங்கினார்.

இராமர் அந்த பக்தர் முன் தோன்றினார்.

"அட முட்டாள்! நான் உனக்குச் சிறிது அறிவையும் வலிமையையும் தந்துள்ளேன். அவற்றை முதலில் பயன்படுத்து.

என்ன முயற்சி செய்தும் உன்னால் முடியவில்லை என்றால் மட்டும் என்னை அழை" என்று சொல்லி விட்டு மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு உற்சாகத்தையும் தன்னம்பிக்கையும் அளிக்கும் போது தனது சுயமரியாதை தானாகவே உயரும் – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுரவும் பிரதமர் மோடியும்

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது குறித்து அதிருப்தியடைந்த இந்தியா, இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என விரும்பியது.

ஆம், கடந்த பொதுத் தேர்தலின்போது சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக வெற்றி பெற்றால், அது தமக்குச் சாதகமாக அமையும் என்பது இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு.

அதேநேரம் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றால் அது தமக்குச் சாதகமாக அமையுமென இந்தியா கருதியிருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரையும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ இந்தியா ஆதரிக்கவில்லை என்ற உண்மையையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

தேர்தல் முடிவுகள் அநுர குமார திஸாநாயக்கவை வெற்றி பெற வைத்தது.

ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்ற கையோடு அவரை முதலில் வாழ்த்திய நாடு இந்தியா என்பதுதான் இங்கு கவனத்துக்குரியது.

தவிர, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை இந்தியாவுக்கு வாருங்கள் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அநுர இந்தியாவுக்குச் செல்கிறார். அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு சென்ற முதலாவது வெளிநாடு இந்தியா என்பது இங்கு அடிக்கோடிட்டுக் குறிப்பிடப்பட வேண்டும்.

ஆம், இந்தியா சென்ற ஜனாதிபதி அநுரவுக்கு பிரதமர் மோடி வழங்கிய வரவேற்பு ஜனாதிபதி அநுரவை குளிரவைத்தது – நெகிழ வைத்தது. வரவேற்பால் நெகிழ்ந்து போன ஜனாதிபதி அநுர; பிரதமர் மோடியை இலங்கைக்கு வருகை தருமாறு அழைத்தார்.

காலம் கனிந்தது. சந்தர்ப்பங்களைத் தக்கவாறு பயன்படுத்துவதில் உச்சம் தொட்ட தலைவராகப் போற்றப்படும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தந்தார்.

என்னே! ஆச்சரியம். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சீனாவுடன் நெருக்கமாக இருப்பார் என்று எதிர்பார்த்த நிலையில்; இநதியப் பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த நாட்டின் உன்னதமான மித்ர விபூஷன் விருதை வழங்கி தனது நட்பை இறுகப் பற்றிக் கொண்டார். இப்போது அந்த நட்பு நீள்கிறது.

டித்வா புயலால் இலங்கையில் ஏற்பட்ட இழப்புகளின்போது பிரதமர் மோடி ஆபத்பாந்தவனாக இருந்து இலங்கைக்கு வேண்டிய உதவிகளை வழங்கினார்.

இப்போது ஜனாதிபதி அநுர இந்தியா சென்றுள்ளார். இந்தியா சென்ற அவருக்கு அதிவிசேட வரவேற்பு. பிரதமர் மோடியின் அன்பான அரவணைப்பு.

பார்த்தீர்களா! இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி அநுரவை எப்படி வாலாஜப் படுத்தினார் என்று.

என்ன செய்வது எங்கள் தமிழ்த் தலைவர்களையும் இந்தியாவுக்கு வாருங்கள் எனப் பிரதமர் மோடி அழைத்தார்.

நம்மவர்கள் அதைப் பொருட்படுத்தவே இல்லை எனும்போது இவர்களால் எங்களுக்கு உரிமை கிடைக்குமா என்ன?

# நாட்டில் அதிகரித்துள்ள துப்பாக்கிச்சூடு; அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

நாட்டில்அண்மைக்காலமாக அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், மனிதப் படுகொலைகள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தற்போதைய நடவடிக்கைகள் என்னவென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அவர் பிரபல நபர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், அரச பாதுகாப்பு பொறிமுறையின் மீதான பொது மக்களின் நம்பிக்கை சீர்குலைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தச் சூழலில் வலுவான பொலிஸ் சேவையின் அவசியம் முன்னுரிமை பெற்றுள்ளதால், பொலிஸ் துறையில் தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவை எவ்வளவு காலமாக நிலவுகின்றன என்பது குறித்த விபரங்களை அரசாங்கம் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

கடந்த தசாப்த காலத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடுகள், படுகொலைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கையை ஆண்டு அடிப்படையில் தெரிவிக்குமாறு கோரிய எதிர்க்கட்சித் தலைவர், அத்தகைய சம்பவங்களில் சந்தேகநபர்களைக் கைது செய்தல், வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் விசாரணை நிறைவடையாத சம்பவங்கள் குறித்து தனித்தனியாக விளக்கமளிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

சர்வதேச தரநிலைப்படி 1,000 பேருக்கு 2.2 பொலிஸ் அதிகாரிகள் என்ற விகிதம் பேணப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்ட அவர், தற்போதைய பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறதா? என்றும் கேள்வி எழுப்பினார். (ம-7)

### கச்சதீவு அந்தோனியார் தேவாலய

## திருவிழாவில் பங்கேற்கும் மக்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா இம்மாதம் 27, 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், திருவிழாவில் கலந்துகொள்வதற்காக தேவாலயத்துக்கு வருகைதரவிருக்கும் பொது மக்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள போக்குவரத்து வசதி, உணவு விநியோகம் முதலான ஏற்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையின் ஊடாக பொதுமக்களுக்கு அறியத் தருவதாவது,

2026.02.27ஆம் திகதி காலை 4 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் இறங்குதுறை வரை சேவையில் ஈடுபடும்.

கச்சதீவுக்கான படகுச்சேவையானது குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து 27.02.2026ஆம் திகதி காலை 5 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப் படும்.

குறிகாட்டுவானில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயக் கட்டணம் 1200 ரூபாவாகும்.

கச்சதீவுக்கு குழுவாக அல்லது தனியாக படகில் வருகை தரும் பக்தர்கள் அவர்களது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வயது, பால் நிலை மற்றும் அவர்கள் பயணிக்கும் படகு இலக்கம், படகின் வகை, படகோட்டியின் பெயர், தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை இரு பிரதிகளில் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப் படகுகளில் திருவிழாவிற்குச் செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்பு கொண்டு உரிய கடற் பயணப் பாதுகாப்பு அனுமதியினைப் பெற்றுக் கொள்வதுடன் 2026.02.27ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்துகொள்ளும் யாத்திரிகர்களுக்கு 28.02.2026ஆம் திகதி காலை உணவு மட்டும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

## தலைமன்னாரில் கைதான மீனவர்களுக்கு மறியல்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 10 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை (19) உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இரு படகில் மீன் பிடிக்கச் சென்ற நிலையில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர்.

இதன் போது கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் குறித்த 10 தமிழக மீனவர்களைக் கைது செய்ததோடு, அவர்கள் பயணித்த 02 படகையும் கைப்பற்றி தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த 10 மீனவர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம-7,285)

### நல்லூர் பிரதேச சபை

## தவிசாளருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

திருநெல்வேலிப் பகுதியில் தனியார் ஒருவரால் மேற்கொள்ளப்படும் விளம்பரச் சேவையினை முன் அறிவித்தல் இன்றி நிறுத்தியமையால் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளருக்கு எதிராக கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனியார் ஒருவரால் பல வருடங்களாக நடாத்தப்பட்டு வருகின்ற விளம்பர ஒலிபரப்புச் சேவையினை அரசியல் பழிவாங்கல் காரணமாக முன்னறிவித்தல் இன்றி உடனடியாக மூடும்படி சபை தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை 27

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

என்.சொக்கன்

இதில்தான் பரம இரகசியங்களில் தொடங்கி, பச்சைப் பொய்கள்வரை அனைத்தும் அச்சாகின்றன.

சிஐஏ இயங்கிவரும் நாடுகளில், மக்களிடையே ஏதேனும் ஓர் அமெரிக்க ஆதரவுக் கருத்தைப் பரப்ப வேண்டியிருந்தால், அதற்கான துண்டுப் பிரசுரங்களை இங்குதான் அச்சிட்டு விநியோகிப்பார்கள். இது தவிர, பல முக்கியமான விடயங்களைப்பற்றிய சிறு, பெரிய நூல்களையும் தயாரிக்கிறார்கள். அதிபரின் PDB அறிக்கைகூட இங்குதான் அச்சிடப்படுகிறது.

ஆனால் இதையெல்லாம்விட, சிஐஏ அச்சகத்தின் முக்கியமான நோக்கம், போலி ஆவணங்களைத் தயார் செய்வது. வெளிநாடுகளில் பணிபுரியும் சிஐஏ அலுவலர்கள், ஏஜெண்ட்களுக்குப் போலியான அடையாள அட்டைகள் / சான்றிதழ்கள் போன்றவற்றை இங்கு தான் அச்சிட்டு விநியோகிக்கிறார்கள்.

இப்படி ஏகப்பட்ட தயாரிப்புகளுடன் உலகத்தை நோட்டம் பார்க்கக் கிளம்பும் சிஐஏ அதிகாரிகள் ஆரம்பத்தில் அரசியல்வாதிகளை, ஆட்சியாளர்களை, இராணுவத்தினரை, அவர்களை எதிர்க்கும் அதிருப்திக் குழுக்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

அதன்பிறகு, அறிவியல் ஆய்வுகள், விண்வெளி ஆராய்ச்சிகள், போதை மருந்துப் போக்குவரத்து என்று அவர்களது கண்காணிப்பு எல்லைகள் விரிவடைந்தன.

சிஐஏவில் தீவிரவாதத் தடுப்புப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டபிறகு, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தீவிரவாதக் குழுக்களின் நடமாட்டம்பற்றிய தகவல்களையும் சிஐஏ உளவாளிகள் சேகரிக்கத் தொடங்கினார்கள். இவர்களில் யாரேனும் அமெரிக்காவைத் தாக்கும் அபாயம் உண்டா என்பது தான் அவர்களுடைய முக்கியக் கவலையாக இருந்தது.

அமெரிக்காவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் யார் ஈடுபட்டாலும், அந்தக் குழுக்களின் நடமாட்டம் பற்றிய தகவல்களை சிஐஏ சேகரித்து, அமெரிக்க அரசிடம் கொடுத்துவிடும். அதன்பிறகு, அந்தத் தகவல்களை எங்கே, எப்போது, எப்படி வெளியிடுவது. எப்படிப் பயன்படுத்துவது. எப்படி எதிர் நடவடிக்கைகள் எடுப்பது என்பதையெல்லாம் அரசாங்கமும் சிஐஏவும் சேர்ந்து முடிவெடுக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில், இதுபோன்ற எதிர் நடவடிக்கைகளில் சிஐஏவின் பெயரே வெளியில் வராது. விடயத்தைச் சொல்லிவிட்டு, என் கடமை தீர்ந்தது என்று போய்க் கொண்டே இருப்பார்கள்.

இதனால், நிஜமாகவே சிஐஏ தீவிரவாதத்தை ஒழிக்கப் பாடுபடுகிறது என்கிற பிம்பம் அமெரிக்க மக்கள் மத்தியில் உருவாகவில்லை. ஏதோ சும்மா பொழுதுபோகாமல் இந்தத் தகவல்களையெல்லாம் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் நினைத்தார்கள். இதன் முக்கியத்துவம் அப்போது யாருக்கும் புரிந்திருக்கவில்லை.



பொதுவாகவே, அமெரிக்கர்கள் தங்களை மையமாக வைத்து தான் உலகம் சுழல்கிறது என்று நினைக்கிறவர்கள். ஒரு விடயத்தில் தங்களுக்கு ஆதாயம் இல்லாவிட்டால், அதில் அக்கறை காட்டமாட்டார்கள். அந்தச் சம்பவம் எந்தவிதத்திலும் அமெரிக்காவைப் பாதிக்கமுடியாது என்பதுபோல் அலட்சியமாக நடந்துகொள்வார்கள்.

இதனால், தொண்ணூறுகளில் உலகமயமாகிக்கொண்டிருந்த தீவிரவாதம், தங்களையும் நேரடியாகப் பாதிக்கக்கூடும் என்று அவர்களுக்கு எண்ணத் தோன்றவில்லை. சிஐஏவின் தீவிரவாதக் கண்காணிப்புகூட, சோவியத் யூனியனுக்குப் பதிலாக, நோட்டம் விடுவதற்கு இன்னும் சில புதிய விரோதிகள் கிடைத்திருக்கிறார்கள் என்கிற அளவில்தான் நடந்துகொண்டிருந்தது.

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில் தான், மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு எதிரான பல தீவிரவாத அமைப்புகள் உருவாகிப் பலம் பெற்றுக்கொண்டிருந்தன. இதை சிஐஏ கவனித்தது. ஆனால், தங்களுக்கு உடனடி பாதிப்பு இல்லை என்று தெரிந்தபிறகு, "பொடிப் பசங்க, பிழைச்சுப்போகட்டும்"" என்று விட்டு விட்டார்கள்.

இப்படி "பிழைத்துப் போன பையன்கள்தான், பிறகு அமெரிக்காவின் கண்ணில் விரல் விட்டு ஆட்டினார்கள். "குய்யோ முறையோ" என்று அலறியடித்துக்கொண்டு, தீவிரவாத ஒழிப்பு ஆயுதத்தைக் கையில் எடுத்தது அமெரிக்கா. இதற்கெல்லாம் முன்னோட்டம் போல, தொண்ணூறுகளின் தொடக்கத்தில் ஒரு விடயம் நடந்தது - ஈராக் அதிபர் சதாம் உசேன், பக்கத்திலிருந்த குட்டி தேசமான குவைத்தை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தார்.

சதாம் உசேன் ஏற்கெனவே அமெரிக்காவுக்கு அறிமுகமான ஆசாமி தான். ஈரான் - ஈராக் யுத்தத்தின் போது அமெரிக்கா ஈராக்கை ஆதரித்துக்கொண்டிருந்தது.

ஆனால் அதற்காக, சிஐஏ சதாம் உசேனை முழுவதுமாக நம்பிவிடவில்லை. வழக்கம்போல், ஈராக்கினுள்ளும் ஊடுருவியிருந்தார்கள், அங்கே என்ன நடக்கிறது என்று ஒரு விடயம் கூட மிச்சம் வைக்காமல் உளவு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இதனால், ஈராக் இராணுவத்தின் செயற்பாடுகளைப்பற்றி சிஐஏ ஓரளவு துல்லியமாகவே புரிந்துகொண்டு விட்டது. ஈராக்கிடம் என்னென்ன விதமான ஆயுதங்கள் உண்டு. அவை எத்தனை தூரம் சென்று தாக்கக்கூடியவை, என்னவிதமான சேதம் உண்டாக்கக்கூடியவை, அவர்களுடைய ஆயுதங்கள் எங்கே தயாராகின்றன, எங்கே சேகரிக்கப்படுகின்றன என்று சகல விவரங்களையும் திரட்டி விட்டார்கள்.

போர் முடிந்தபிறகும், ஈராக்கின் அடுத்த அடுத்தகட்ட நடவடிக்கைகளை அறிந்து கொள்வதற்காகத் தங்களின் கண்காணிப்பைத் தொடர்ந்தது சிஐஏ. அப்போதுதான், கவலைக்குரிய ஓர் அம்சத்தை அவர்கள் கவனித்தார்கள்.

ஈராக்கின் ஆயுத பலம், கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எண்ணிக்கை அளவில் மட்டுமல்ல. முன்பைவிடக் கூடுதல் சக்தி வாய்ந்த, அதிக தூரம் பாயக் கூடிய ஆயுதங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றது சிஐஏ.

ஆனால், அப்போதைய சூழ்நிலையில், அமெரிக்க அரசாங்கத்துக்கு இவையெல்லாம் வெறும் தகவல்களாகமட்டுமே தெரிந்தன. ஈராக் தனது ஆயுதங்களை அமெரிக்காவை நோக்கித் திருப்பாத வரையில், இவர்கள் அதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

எதற்கும் இருக்கட்டும் என்று சிஐஏ ஈராக்கில் தனது உளவுப் பணிகளை மேலும் விரைவாக முடுக்கிவிடத் தொடங்கியது. ஈராக் இராணுவம் எங்கே, என்ன செய்து கொண்டிருக்கிறது என்று விநாடி சுத்தமாக தகவல்களைத் திரட்டத் தொடங்கினார்கள்.

அதுமட்டுமில்லை, சதாம் உசேனும் அவரது சக மந்திரிமார்களும் நான்கு சுவர்களுக்குள்ளும், அதற்கு வெளியிலும் என்ன பேசுகிறார்கள், சுற்றுவட்டாரப் பதினெட்டுப் பட்டி நாடுகளோடு அவர்களுக்கு என்ன விதமான நல்லுறவு இருக்கிறது, நாளைக்கே ஒரு பிரச்சினை என்றால், யாரெல்லாம் சதாமுக்கு ஆதரவாகவருவார்கள், யாரெல்லாம் எதிர்த்து நிற்பார்கள் போன்ற விவரங்களையும் சேகரித்தது சிஐஏ.

இதையெல்லாம் தொகுத்துப் பார்க்கிறபோது, அவர்களுக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிந்தது - சதாம் உசேன், சாதாரணமானவர் இல்லை. சதாமின் பேச்சில் எப்போதும் நெருப்பு பறக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதச்...

பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தவிசாளரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தற்போது அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கு எதிராகப் பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்திற்குத் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்த நிலையில் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனவும் தற்போது அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுல்படுத்தக்கூடாது எனவும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபை உறுப்பினர்களான சிவபாதம் குகனேசன் மற்றும் குமாரவேலு அகிலன் ஆகியோரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் எனவும் தற்போது அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுல்படுத்தக்கூடாது என பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நடுநிலை வகிக்க ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

21 உறுப்பினர்களைக் கொண்ட புதுக்குடியிருப்புப் பிரதேச சபையில் 3 உறுப்பினர்கள் நேற்று சபைக்கு சமுகமளிக்கவில்லை. வருகைதந்த 18 உறுப்பினர்களில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 4 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருக்க, மிகுதி 14 பேரும் குறித்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து பிரேரணையை நிறைவேற்றியிருந்தனர். (ம-7)

## மானிப்பாயில்...

டைய இளைஞன் சடலம் நேற்று வியாழக்கிழமை (19) இரவு மீட்கப்பட்டுள்ளது.

இதில் நாவற்காடு அச்சுவேலியைச் சேர்ந்த இரவீந்திரன் லதீசன் என்பரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மானிப்பாயில் உள்ள சித்தி வீட்டிற்குச் சென்ற வேளை காணாமல் போன நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினர். (ம-7,60)

## மருத்துவ பீட...

நற்குணம் அபிராமி என்ற மாணவி 8 தங்கப் பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் மருத்துவ பீடத்திலிருந்து ஒருவர் எட்டு தங்கப் பதங்கங்களைப் பெற்றமை மிகப்பெரிய சாதனையாகப் பார்க்கப்படுகிறது. (ம-7)

## பொருளாதார...

திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற 'AI Impact Summit' உச்சி மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

AI தொழில்நுட்பத்தைக் கடந்த கால தொழிற்புரட்சிகளுடன் ஒப்பிட்ட ஜனாதிபதி, இது தேசிய வளர்ச்சியை மாற்றியமைக்கும் ஒரு சக்தியாகக் கருதப்பட வேண்டும் என்றார்.

AI வசதி கொண்ட நாடுகளுக்கும் இல்லாத நாடுகளுக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளி, பல நாடுகளைப் பொருளாதார ரீதியாக ஓரங்கட்டும் அபாயத்தை உருவாக்குவதாக எச்சரித்தார்.

இலங்கை இன்னும் முழுமையான உட்கட்டமைப்பை உருவாக்கவில்லை என்றாலும் திறமையான இளைஞர் பட்டாளம் மற்றும் வலுவான சட்ட அமைப்பைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இதற்காக தரவுப் பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு சட்டங்கள் நவீனமயமாக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

AI துறையில் ஒரு சில மொழிகள் மட்டும் ஆதிக்கம் செலுத்துவது கலாசார பன்முகத்தன்மையை அழிக்கும். எனவே உள்ளூர் மொழி கள் மற்றும் கலாசார அறிவை டிஜிட்டல்மய மாக்கி AI உடன் இணைக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

பிராந்திய ஒத்துழைப்புக்காக பகிரப்பட்ட தரவு ஆளுமை, பொதுவான மொழி தரவுத் தொகுப்புகள், ஒருங்கிணைந்த மதிப்பீட்டு முறைகள், பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாட்டு கட்டமைப்புகள் ஆகிய நான்கு விடயங்களை முக்கிய பரிந்துரைகளாக ஜனாதிபதி முன்வைத்தார். இந்தியா போன்ற நாடுகள் டிஜிட்டல் உட்கட்டமைப்பில் கொண்டுள்ள தலைமைத்துவத்தைப் பயன்படுத்தி, பாதுகாப்பான பிராந்திய AI வசதிகளை உருவாக்க இலங்கை ஒத்துழைக்கும் என ஜனாதிபதி உறுதியளித்தார். (ம-7)



அமெரிக்காவின் பசுபிக் கடற்படையின் கட்டளைத் தளபதியான அட்மிரல் ஸ்டீவ் வெப் கேலர் நேற்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

தொடர்ந்து 21ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினருடன் முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார். (ம-7)

## 12 இந்...

நெடுந்தீவு கடற்பரப்பினுள் இரண்டு படகுகளுடன் 12 இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட வேளை கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 12 கடற்றொழிலாளர்களையும் அவர்களின் படகினையும் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகத்திற்கு கொண்டு வந்த கடற்படையினர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழிலாளர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதனையடுத்து 12 கடற்றொழிலாளர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2026.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 6110
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 4 1 1 3 0 8

அத சம்பத
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 1 3 0 8
சீட்டிழுப்பு இலக்கம் 0685
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 226
தனுசு — வெற்றி இலக்கங்கள் 15 36 44 — 2913

தன நிதானய
திகதி - 2026.02.19
சீட்டிழுப்பு இலக்கம் - 2140
D 01 10 16 34 D
ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 19/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2458
B 14 13 30 71 75

ஜய ஜய JAYA
திகதி 2026.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 0378
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 3 5 8 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4352
சீட்டிழுப்பு திகதி 19.02.2026
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 19 52 69 76
N
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 1419
இடபம் 25 39 42 57 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.02.2026 வெற்றி வாரம் 0818
ஆங்கில எழுத்து G — மற்றும் வெற்றி இலக்கம் 7 6 2 7 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,721,712.80
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3084
சீட்டிழுப்பு திகதி 2026.02.19 — தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 13 38 45 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 99,869,854.40

சனிதா
திகதி 19.02.2026 வெற்றி வாரம் 5245
வெற்றி இலக்கங்கள் 38 52 70 71 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,443,688.00
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 914
சீட்டிழுப்பு திகதி 19.02.2026 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 | 34 | 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,802,160.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4796
சீட்டிழுப்பு திகதி 19.02.2026 — தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 13 25 29 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,050,302.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 23 21 27 39 65
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 2260
திகதி 19.02.2026 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.1,50,000,000.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI அத கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2910
சீட்டிழுப்பு திகதி: 2026.02.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.91,616,436.00
வெற்றி இலக்கங்கள் 01 04 20 21 T
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.சர்வதேச விமான நிலையத்திற்கு

# வடக்கிலிருந்து அதிக பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை - ஆளுநர்

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு வடக்கில் இருந்து அதிக பணியாளர்களை நியமிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு அமைச்சர்கள் குழாமுடன் விஜயம் செய்து, அபி விருத்தியைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கை யில் ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில், எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு விமானத்துறை சார்ந்த பணியாளர் களை வடக்கில் இருந்து அதிகளவாக நியமித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்காக விமா னத்துறை அமைச்சர் உள்ளிட்ட குழு வினர் வருகை தந்து ஆளுநர் செய லகத்தில் கூட்டம் ஒன்றினையும் நடாத்தியிருந்தனர். அதன் பின்னர் பலாலி சர்வதேச விமான நிலையத் தையும் பார்வையிட்டனர்.

பலாலி விமான நிலையத்தின் விஸ் தரிப்பு மற்றும் வசதிகள் போதாமல் உள்ளமை தொடர்பாக அந்த இடங் களைப் பார்வையிட்டு, அபிவிருத்தி களை விரைவுபடுத்தல் போன்றன பற்றியும் இங்கே கலந்துரையாடினார் கள்.

சர்வதேச விமான நிலையமாக இருக்கின்ற பலாலி விமான நிலையத் தில் தற்போது அடிப்படை வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றன. அதை நிவர்த்தி செய்வதற்கு இரண்டு கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒரு அபிவிருத்தி ஏற்கெனவே ஆரம் பித்த நிலையில் மற்றைய அபிவிருத்தி எதிர்வரும் ஜூன் மாதமளவில் ஆரம் பித்து, இந்த விமான நிலையம் அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு விமான நிலையமாக மாற்றப்படும் என்றார். (ம-7,104)

# எரிவாயு தட்டுப்பாட்டுக்கு உடன் தீர்வு காண்க

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

நாட்டில் நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக பொருளாதார வலயத்தில் அமைந்துள்ள எரி வாயு முனையத் திலிருந்து உள் நாட்டு சந்தைக்கு எரிவாயுவை விநி யோகிக்க நடவ டிக்கை எடுக்கு மாறு அவர் அர சாங்கத்திற்கு முன்மொழிந்துள் ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 - 06 - 1936



இறப்பு 19 - 02 - 2026

## மங்கையற்கரசி செல்லத்துரை

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி செல்லத்துரை அவர்கள் நேற்று (19.02.2026) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - ராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காஞ்சென்றவர்களான கனகநாயகம், விஜயலக்ஷ்மி(ஆசிரியை) மற்றும் தர்மபாலா(Uk), தர்மதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுசிகலா(Uk), சாந்தகுமார், ஸ்ரீகணேஷன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிரோஷன்(Uk), மதுரன், சுவர்னா, ஆதவன், ஜிதுர்சனன், ஜிருசிகன்(Uk), ஜிருசிகா, ஜிதுசனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விஜயலக்ஷ்மி, ஸ்ரீஸ்கந்தராஜா, நாகலக்ஷ்மி, சிவராஜா, ரகுநாதன், திலகவதி, நாகேஸ்வரி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எருக்கலம்பெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(6882)

தகவல் : குடும்பத்தினர்
021 221 3565

## அபிவிருத்தி...

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க மற்றும் பிரதி அமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு ஆகியோர் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

குழுவினர் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் அங்கு அன் றாடம் இடம்பெறும் சேவைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரி களால் குழுவினருக்கு விளக்கமளிக் கப்பட்டது.

அத்துடன் விமான நிலையத்தின் தற்போதைய தேவைப்பாடுகள், முன் னெடுக்கப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் மற்றும் எதிர்கால அபிவிருத் தித் திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் அங்கு நடைபெற்று வரும் கட்டுமானப் பணி களையும் அமைச்சர் உள்ளிட்ட உயர் மட்டக் குழுவினர் நேரில் பார்வை யிட்டனர். (ம-7,33)

## ஆயிரம் தொல்...

புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்றுக் கருத் துத் தெரிவிக்கும் போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதற்கட்டமாக நாடு முழுவதும் சிதறிக்கிடக்கும் வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்த இடங்களை முறையாக வரைபடமாக்குவதற்கான விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்.

இந்தத் திட்டம் வெறும் அரசாங்கக் கண்காணிப்புடன் மட்டும் நின்றுவிடா மல் அந்தந்தப் பகுதிகளில் வாழும் உள்ளூர் சமூகங்களின் நேரடிப் பங் களிப்புடன் செயற்படுத்தப்படும்.

அடையாளம் காணப்படும் வரலாற் றுச் சின்னங்களைப் பராமரிக்கவும் அவற்றைச் சிதைவுகளிலிருந்து பாது காக்கவும் உள்ளூர் மட்டத்தில் "சமூகப் பாதுகாப்புக் குழுக்கள்" அமைக்கப்பட வுள்ளன.

நாட்டின் கலாசார மரபுகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் நோக்கில், இனங்காணப் படாத இந்தத் தொல்பொருள் தளங் களுக்குச் சட்டபூர்வப் பாதுகாப்பை உறுதி செய்ய அரசாங்கம் முன்னு ரிமை அளித்து வருவதாகப் பிரதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டி னார். (ம-7)


இலங்கையில் இருந்து கனடாவிற்கு
கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY ➤ 2-3 Months
எமது நேரடி கிளைகள்
திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கொடிகாமம், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், சங்கானை, புத்தூர், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-5024)
V2 TRAVELS 076 822 6244 076 455 0672


## குடும்பப் பெண்...

வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் அத்துமீறிப் பிர வேசித்த மூவர் அடங்கிய வாள்வெட் டுக் குழுவொன்று கணவனைத் தாக்கி விட்டு மனைவி மீது வாளினால் சரமாரி யாகத் தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதலின் பின் வீட்டின் முன் னால் நின்று எவரும் படுகாயமடைந்த பெண்ணை மீட்க முடியாதவாறு அட்ட காசம் புரிந்துள்ளனர்.

இதன்போது பிரதேசவாசிகள் பருத் தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியும் பயனளிக்காத நிலையில் நீண்ட பிரயத்தனத்தின் பின் படுகாய மடைந்த பெண் மீட்கப்பட்டு நோயா ளர் காவுவண்டி ஊடாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச் சைகளுக்காக யாழ்.போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (ம-7)

## பழசும்...

தடைச்சட்டத்தை நீக்க வேண்டும்.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவினை மீளப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்ற லில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று வியாழக்கிழமை முதல் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை வரையான நான்கு நாட்கள் பன்னிரண்டு அமர்வு களாகப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இந்நிலையில் யாழ். பல்கலைக் கழகம் முன்பாக எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை வரையில் குறித்த கையெ ழுத்துப் போராட்டமும் முன்னெடுக்கப் படவுள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபினை மீளப் பெறு என்றும் தற்போதுள்ள பயங்க ரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு என்றும் வலியுறுத்தி பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் ஆகியன இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத் துள்ளனர். (ம-7,33)

## இந்தியப்...

பாணம் விஜயம் செய்துள்ளார்.

நேற்றைய விஜயத்தின் போது அவர் பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ம-7)


# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

▢ மாம்பழச்சந்தியிலிருந்து 350m தூரம்

▢ ஒரு பரப்பின் விலை :- 48 இலட்சம்

(2068)

076 860 2770, 076 987 8617


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org